# ஜாலான் கல்லோவே சாலையின் தரம் உயர்த்தப்படவில்லை

கோலாலம்பூர், மே 29-

ஜாலான் புடு வட்டாரத்தில் உள்ள ஜாலான் கல்லோவே சாலையின் தரம் பல்லாண்டு காலமாக உயர்த்தப்படாமல் இருக்கிறது.

காலனித்துவ அடிச்சுவடுகளை கொண்ட பழம் பெரும் கட்டடங்களை கொண்ட பகுதி இது. சுற்றுலாவாசிகள் திரளாக வலம் வரும் சாலைப் பகுதி இது. எனினும் இச்சாலை பகுதியானது சுற்றுவட்டார மேம்பாட்டை பிரதிபலிப்பதாக இல்லை. பல்லாண்டு காலமாக இந்த சாலைப்பகுதியின் தரம் உயர்த்தப்படவில்லை. இச்சாலையினை பயன்படுத்துவோரின் மனநிலை வெகுவாக பாதித்துள்ளது.



இச்சாலையின் மோசமான நிலைமை குறித்து பொதுமக்களிடமிருந்து கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் ஆலோசனை வாரிய உறுப்பினர் கார்மென் லியோங்கிற்கு புகார் வந்துள்ளது.

புக்கிட் பிந்தாங்-கேஎல்சிசி சுற்றுலா மையத்தில் இச்சாலை இடம் பெற்றிருந்தாலும் ஜாலான் புக்கிட் பிந்தாங் சாலைப்பகுதியின் தரம் உயர்த்தப்படும் போது எல்லாம் இச்சாலை விடுபட்டு போவதற்கான காரணம் என்ன? என்பது தெரியவில்லை. ஜாலான் கல்லோவே சாலையின் பிரதான வழிபாதையின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று கார்மென் லியோங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பகுதிக்கு சுற்றுலாக் காரர்கள் பரவலாக வருகை தந்துள்ளனர். சாலை பகுதி மோசமாக இருந்தால் இது சுற்றுலாக்காரர்கள் மத்தியில் ஓர் எதிர்மறையான தோற்றத்தை தோற்றுவிக்கும்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம் பிறகு இப்பகுதிகளுக்கு வருகை புரிந்தது. ஜாலான் கல்லோவே, ஜாலான் ஹாங் இசாப், ஜாலான் சின் சியு தீ ஆகிய சாலைகளின் தரம் உயர்த்தப்படும் என்று முடிவாகியுள்ளது.